லூயி பிரெயிலின் படப்புத்தகம்



டேவிட் ஏ. ஏட்லர்

வரைகலை - ஜாண் & அலெக்ஸாண்ட்ரா வால்னர்

Tamil : Ponnammal

லூயி பிரெயிலின் படப்புத்தகம்



டேவிட் ஏ. ஏட்லர்

வரைகலை - ஜாண் & அலெக்ஸாண்ட்ரா வால்னர்

Tamil : Ponnammal



ஜனவரி 4, 1809-ம் ஆண்டுபிரான்ஸின் தலைநகரமாகிய பார்ஸுக்கு அருகில் உள்ள ஒரு சிறிய கிராமம் கூவே என்கிற கிராமத்தில் லூயி பிரெயில் பிறந்தார். அவருடைய தந்தை சைமன் செனி பிரெயில் குதிரைகளின் மேல் அமரக்கூடிய இருக்கையான சேணம் செய்பவர் ஆவார்.அவரது தாயாரது பெயர் மோனில் பேரன் பிரெயில். இந்த பெற்றோர்களின் நான்காவது குழந்தைதான் பிரெயில் ஆவார்.

பிரெயில் குடும்பத்தினர் மூன்று அறைகளைக் கொண்ட ஒரு கல் வீட்டில் வசித்தனர். அவர்களுடைய பண்ணையும், திராட்சைத் தோட்டமும் அவர்களது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தன. அவரது தந்தை வேலை செய்யும் முற்றத்தில் ஒரு பெரிய பணிமேடை இருக்கும். கூடவே சேணம் செய்வதற்கான தோல் பட்டைகள், சுத்தியல், கூர்மையான கத்திகள் மற்றும் குத்தூசிகள் நிறைய கிடக்கும். தந்தையார் வேலை செய்யும் போது, லூயி பக்கத்திலேயே சிறிய தோல் துண்டுகளை வைத்து விளையாடிக் கொண்டிருப்பான்.





அது ஒரு கோடைகாலம். லூயியின் தந்தை வெளியே ஒரு வாடிக்கையாளரிடம் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது மூன்று வயது சிறுவனான லூயி, கடைக்குள் சென்று இருப்பதிலேயே கூர்மையான ஒரு கருவியை எடுத்து, அவன் தந்தையார் வேலை செய்வதைப் போலவே இயக்கிப்பார்த்தான். துரதிருஷ்டவசமாக அந்தக் கருவி அவன் கண்ணைக் காயப் படுத்தி விட்டது.





லூயி கீழே விழுந்து கதறி அழுதான். ஓடோடி வந்த அவன் பெற்றோர்கள், அவன் காயத்தைக் கழுவி கட்டுப் போட்டு விட்டார்கள்.



லூயியின் பெற்றோர் அவனை ஒரு வயதான மூதாட்டியிடம் கூட்டிச் சென்றனர், அவர் எல்லோரையும் குணப்படுத்தும் சக்தி படைத்தவர் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது.

அந்த அம்மையார் ஆம்பல் பூவின் சாறை லூயியின் காயத்தில் ஊற்றினார். ஆனால் எந்த பயனும் ஏற்படவில்லை. பிறகு அவனை ஒரு மருத்துவரிடம் கூட்டிச் சென்றனர். ஆனால் லூயியின் இரண்டு கண்களும் இப்போது தொற்றுக்கு உள்ளாகி இருந்தன. கூடிய சீக்கிரத்தில் அவன் தனது இரண்டு கண்களிலும் பார்வையை இழந்தான்.


மனவலிமை குறையாத லூயி, தானே எப்படி சாப்பிடுவது, எதிரில் இருக்கும் பொருட்களைத் தட்டாமல் எப்படி நடப்பது என்றெல்லாம் கற்றுக்கொண்டான். லூயியின் தந்தை அவனுக்கு ஒரு தடி செய்து கொடுத்தார். அதை வைத்து அவன் நடக்கும் பாதையைத் தட்டிக் கொண்டே செல்வான். போகும் வழியில் எந்த விதமான தடங்கலும் இல்லை என்பதை உறுதி செய்ய அந்தத் தடி அவனுக்கு உதவியது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு நடக்கும் போது, அவன் எத்தனை அடி எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது என்பதை எண்ணி வைத்துக் கொள்வான், திரும்பி வரும்போது அந்த எண்ணிக்கை அவனுக்கு உதவியது.



லூயியின் உலகம் இருண்டு போயிற்று. ஆனால் அவன் மனம் தளரவில்லை. கண்களை இழந்தாலும், அவனது மற்ற புலன்கள் அதிக சக்தியுடன் விளங்கின. ஒவ்வொரு பொருளையும் அதனுடைய சத்தம், வாசனை, மற்றும் வடிவத்தை உணர்ந்து புரிந்து கொள்ள ஆரம்பித்தான்.

ஆட்களின் நடந்து வரும் ஓசையை வைத்தே, யார் வருகிறார்கள் என்பதை அவனால் கணிக்க முடிந்தது. பாதையில் வரும் வண்டிகளின் சக்கர ஓசையைக் கொண்டே யார் வருகிறார்கள் என்று அவனால் சொல்ல முடிந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்ஸ் நாடு போரில் ஈடுபட்டது. அப்போதைய அரசராக இருந்த நெப்போலியன் தனது மிகப்பெரிய படைகளை ஐரோப்பாவுக்கும் ரஷ்யாவுக்கும் போர் செய்ய அனுப்பினார். முதலில் வெற்றி வாகை சூடினாலும், 1814-ம் ஆண்டு நெப்போலியனின் படைகள் தோல்வியைத் தழுவி, தமது நாட்டுக்குத் திரும்பினர்.
1814-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், ரஷ்ய வீரர்கள் கூவே கிராமத்தைக் கைப்பற்றி, அந்த ஊர் மக்களிடம் தங்குவதற்கு இடமும், புசிக்க உணவும் கேட்டு அராஜகச் செய்தனர். அடுத்த இரண்டு வருடங்களுக்கு ரஷ்ய வீரர்களின் நடமாட்டம் பிரெயில் குடும்பத்தார் வீட்டருகே அதிகம் இருந்தது. லூயியால் எதையும் பார்க்கவோ, புரிந்து கொள்ளவோ முடியவில்லை. அந்தச் சிறுவனுக்கு இந்த நடவடிக்கைகள் பயத்தை ஏற்படுத்தியிருக்கும்.





இந்த சுழ்நிலையில் 1815-ம் ஆண்டு, ஜேக்கஸ்பாலி என்கிற பாதிரியார். கூவேக்கு வந்தார். அவர்தான் லூயியின் முதல் ஆசிரியர். அவர் அவனுக்கு பைபிளைப படிப்பித்தார்.. மிருகங்களை அவற்றின் ஓசையினாலும், மலர்களை அவற்றின் மணத்தினாலும் அறிந்து கொள்ள அவனுக்குச்சொல்லி கொடுத்தார்.






லூயியின் தந்தை, தனது அறிவுக்கூர்மையால், வட்ட வடிவிலான ஆணிகளைக்கொண்டு ஒரு மரப்பலகையில் எழுத்துக்களை வடிவமைத்தார். அந்த ஆணிகளைத் தடவிப்பார்த்து லூயி அந்த எழுத்துக்களைப் புரிந்து கொள்ள ஆரம்பித்தான். அதன் பிறகு அவன் தந்தை எழுத்துக்களைக் கூட்டி வார்த்தைகளாகப் படிக்க உதவினார்.

அடுத்த வருடம் கூவேக்கு ஆண்டாயின் பெஷரெட் என்று புதிய ஆசிரியர் வந்தார். பொதுவாக, பார்வையற்ற குழந்தைகளுக்குப் பள்ளியில் சென்று முறையாக கல்வி கற்பது என்பது மிகவும் கடினம். ஆனால், லூயி அதி புத்தி சாலியாகவும், -சுறுசுறுப்பாகவும் இருந்ததால், பெஷரட்டுக்கு அவனுக்குப் பாடம் சொல்லித்தருவது மிகவும் பிடித்திருந்தது

லூயியால் மற்ற மாணவர்களைப் போல புத்தகங்கள் படிக்க முடியவில்லை. தனது கேள்வித்திறனாலும், மிகுந்த ஞாபக சக்தியினாலும் அவன் மாணவனாக விளங்கினான்







1819 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் லூயிபார்வையற்றவர்களுக்கான தேசிய நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டான். இந்நிறுவனம் 1784-ல் பாரீஸில் வேலன்டைன் ஹே என்பவரால் பார்வையற்றவர்களுக்காக முதன் முறையாக நிறுவப்பட்டது ஆகும்

லூயி இங்கு வந்தபோது, அதுஒரு இருண்ட, ஐந்து மாடிக் கட்டடமாக இருந்தது. அதன் ஜன்னல்களில் உலோகக் கம்பிகள் அமைக்கப்பட்டிருந்தன. முப்பது வருடங்களுக்கு முன்னால், பிரஞ்சுப் புரட்சி நடந்த காலத்தில், இக்கட்டிடம் ஒரு சிறைச்சாலையாக இருந்தது. லூயி தன் மீதி நாட்களை இக்கட்டிடத்தில்தான் கழிப்பதாக இருந்தது!.










அந்த கல்வி நிறுவனத்தில் லூயிக்குப் படிப்பதற்க்கு நிறைய புத்தகங்கள் இருந்தன . அந்தப்புத்தகங்கள் பெரியதாகவும், கடினமானதாகவும், எழுத்துக்கள் எழும்பிய நிலையிலும் இருந்தன. விரல் நுனிகளால் அந்த எழுத்துக்களைத் தடவிப் பார்த்து, படிப்பது மிகவும் கடினமானதாக இருந்தது. அதிலும், ஆங்கில எழுத்துக்களான R மற்றும் P, E மற்றும் F ஆகியவற்றை பிரித்துப் படிப்பது. கஷ்டமாக இருந்தது. ஆனால், லூயி தனது திறமையாலும், மனவலிமையினாலும் படிக்கம் கற்று கொண்டான்



1821-ல் லூயிக்கு சோனகிராபிஎன்கிற ஒலிப்பதிவால் படிக்கும் முறை கற்பிக்கப்பட்டது. இந்த முறை மேம்படுத்தப்பட்ட புள்ளிகளாலும், கோடுகளாலும். இரவு நேரங்களில் விளக்கு வெளிச்சம். இல்லாமல் படிக்கக் கூடியது ஆகும் இதனை சார்ல்ஸ் பார்பியர். என்ற பிரெஞ்சுப்படைத்தளபதி கண்டு பிடித்தார்
இந்தமுறையால் படைவீரர்கள் அவர்களுக்கான செய்திகளை ஒளி இல்லாமலே படிக்க முடிந்தது.
லூயிக்கு இந்த படிப்பு முறையில் மிகவும் ஆர்வம் இருந்தது. ஆனால் கூடிய விரைவிலேயே, இந்த முறையில் சில குறைகளை அவன் கண்டான்.

ஒரு சிறய வார்த்தைக்குக்கூட நிறைய புள்ளிகளும், கோடுகளும் தேவைப்பட்டன. எண்களுக்கும், உச்சரிப்புக்கும் எத்த விதமான குறியீடும் இருக்கவில்லை. ஸோனா கிராபி முறையில் ஒவ்வொரு ஒலிக்கும் குறியீடு இருந்ததே தவிர எழத்துகளுக்கு எந்தக் குறியீடும் இருக்கவில்லை. அதனால், லூயியால் அவற்றை எழுத்துக்கூட்டிப்படிக்க முடியவில்லை.





லூயி தானாகவே இந்த எழுத்துக்கான குறியீடுகளைக் கண்டு பிடிக்கும். ஆராய்ச்சியில் இறங்கினான் இரவும் பகலும் பாடுபட்டான். 1824 ம் ஆண்டு தனது முறையை ஆண்ட்ரீ பிக்னியர் என்கிற தலைமை ஆசிரியருக்கு நிருபித்துக் காட்டினான்



லூயி பிரயிலின் புதிய குறியீடு இரண்டு வரிசையில் வரிசைக்கு மூன்று புள்ளியாக, மொத்தம். ஆறு புள்ளிகளை கொண்டது. இதில் அறுபத்தி மூன்று விதமான சேர்க்கை மூலம் நிறுத்த குறிகள், எண்கள், கணிதகுறியீடுகள் மற்றும் அனைத்து எழுத்துக்களும் படிக்க வசதியாக இருந்தது. அதன் பிறகு இசைக்குறிப்புக்கும் மேப்படுத்தப்பட்ட புள்ளி குறியீடை க் கண்டுபிடித்தான்.

பிரெயிலின் இந்த முறை படிப்பதற்கு மிக இலகுவாக இருந்தது. மற்றும் பிற கண்தெரியாத மாணவர்களும்.எழுதவும் முடிந்தது.

1825 ஆம் ஆண்டு வாக்கில், லூயிஸ் பிரெய்லியும் அவரது நண்பர் கேப்ரியல் கூதியரும் முதல் பிரெய்லி எழுத்துப் பலகையை உருவாக்கினர். இப்போது லூயிஸ், கேப்ரியல் மற்றும் பிற பார்வையற்றவர்களால் எழுத முடிந்தது.



1826 ம் ஆண்டு, லூயியை அதே நிறுவனத்தில் உதவியாளராகவும், இன்னும் இரண்டே ஆண்டுகளில் முழுநேரஆசிரியராகவும் நியமித்தனர். அவர் கணிதம், பூகோளம். இலக்கணம் மற்றும் இசை பயிற்றுவித்தார். படிப்பு புரியாத மாணவர்களிடம் மற்ற ஆசிரியர்கள் கடுமையாக நடந்து கொன்டனர். ஆனால், லூயி மென்மையாகவும், கனிவோடும் நடந்து கொண்டனர்.




) பார்வைதிறன் கொண்ட பலர் முதலில். பிரெயில் முறையை எதிர்த்தனர்.இந்த முறையைப் பின்பற்றினால், நிறைய செலவு ஏற்படும், நிறைய புதுப் புத்தகங்கள் பார்வை. யற்றவர்களுக்காக எழுதப்பட வேண்டும் என்றெல்லாம். அவர்கள் வாதிட்டனர். அவர்களுக்கு இதற்கு முன்னால் இருந்த முறையே பிரச்சினை இல்லாமல் இருந்தது.

தேசிய நிறுவனம், பழைய முறையேபின்பற்றினாலும், நிறைய மாணவர்கள் பிரெயிலின் முறையைக் கடைப்பிடித்து வந்தனர் ஏனெனில் அவர்களுக்கு அது விறுப்பமாக இருந்தது டாக்டர். பிக்னியரும் பிரெயில் அதிகாரபூர்வமான, பார்வையற்றவர்களுக்கான மொழியாக அறிவிக்க விரும்பினார். ஆனால் நிறுவனத்தின் இயக்குநர்களுக்கு அது பிடிக்கவில்லை. எனவே அவர்கள் 1840-ம் ஆண்டு டாக்டர், மிக்னியரை தேசிய நிறுவனத்தை விட்டுச் செல்லுமாறு உத்தவிட்டனர்

பார்வைத்திறன். கொண்டவர்கள். பிரெயில் முறையைக் கற்கவில்லை. அதனால். பார்வையற்றவர்கள் அவர்களுக்கு எதையும் எழுத்து மூலம் தெரிவிக்க முடியவில்லை. எனவே, 1839 ம் ஆண்டு, பிரெயில் ராபிகிராபி என்ற புதிய முறையை உருவாக்கினார், இந்த முறையில் அவர் மேம்படுத்தபட்ட புள்ளிகளால் எழுத்துக்களை வடிவமைத்தார் இதன் மூலம் பார்வையற்றவர்கள் எழுத்துக்களைத் தடவிப் புரிந்து கொள்ள முடிந்தது.






லூயிபிரெயில் தனது குறியீடுகளின்ஆராய்ச்சியில் இருந்த போதும், பாடம் சொல்லி கொடுப்பதை நிறுத்தவில்லை. ஆனால் பாடம் சொல்லி கொடுக்கும் போதே சில நேரம் அவருக்கு இருமல் வலிப்பு வந்து பாடத்தை நிறுத்த நேரிடும். 1835-ம் ஆண்டு அவர், காசநோய் என்னும் நுரையீரலைபாதிக்ககூடிய கொடிய நோயால் தாக்கப் பட்டார். சில நாட்கள் அவர் தனது சொந்த ஊரான கூவேக்கு சுத்தமான காற்றை சுவாசிக்கவும். ஓய்வு எடுக்கவும் சென்று வந்தான்

1851-ம் ஆண்டு இறுதியில் லூயி மிகவும் நோய்வாய்ப்பட்டார். தனது நண்பர்களிடம் இந்த பூமியில் எனக்கான பணியை முடித்து விட்டேன் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்று கூறினார் . 1852-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் தேதி தனது 43-வது பிறந்தநாளுக்குப் பிறகு, இந்த மாபெரும் ெபொதுநல விரும்பி இயற்கை எய்தினார்





1852-ல் லூயி பிரெயிலின் சாதனைகள் பலருக்கு தெரிந்திருக்க வில்லை ஆனால்.   19 –ம் நூற்றாண்டின் இறுதியில் பிரெயிலின் ஆறு புள்ளி குறீயிடு உலகெங்கும் பல மொழிகளில் பயன்படுத்தப்பட்டது.
கேட்கவும் பார்க்கவும் திறன் அற்ற ஹெலன் கெல்லர், லூயியைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் கடவுளை போன்று தைரியத்தையும், பொன்னான இதயமும் கொண்டவர் என்று வர்ணிக்கிறார். பிரெயில் முறையால் என்னால் வாசிப்பை இனிமையான அனுபவமாக உணர முடிந்தது என்னை சுற்றி இருக்கிற உலகம் மிகவும் அற்புதமான பொக்கிஷங்களை கொண்டதாக என்னால் உணர முடிகிறது

உண்மை உலகம் முழுவதும்உள்ள எண்ணற்ற ஊனமுற்றோருக்கு , பிரெயில் ஒரு உறுதியான எழுத்து வடிவத்தை கொடுத்து அவர்களை ஒரு இருட்டான உலகத்திலிருந்து வெளிச்சத்துக்கு அழைத்து செல்கிறார் "என்று. ஹெலன்கெல்லர் மேலும் சொல்கிறார் அவரது சொற்கள் மிகையல்ல. நிதர்சனமான உண்மை



ஆசிரியரின் குறிப்புமுறையான சிகிச்சை இருந்திருந்தால், கண்ணில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக லூயிஸ் பிரெய்லி பார்வையற்றவராக இருந்திருக்க மாட்டார். இன்று, லூயிஸ் பிரெய்லியைக் கொன்ற நோயான காசநோய் கூட வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்படுகிறது.லூயிஸ் பிரெய்லி முதலில் புள்ளிகள் மற்றும் கோடுகளைப் பரிசோதித்தார். புள்ளிகள் எளிதில் உணரப்படுவதைக் கண்டறிந்தபோது, அவர் கோடுகளை கைவிட்டார்.1952 ஆம் ஆண்டில், லூயிஸ் பிரெய்லியின் மரணத்தின் நூற்றாண்டு விழாவில், அவரது உடல் பாரிஸில் உள்ள பாந்தியோனுக்கு மாற்றப்பட்டது. அங்கு, அவர் மற்ற சிறந்த பிரெஞ்சு ஹீரோக்களுடன் அடக்கம் செய்யப்பட்டார்.



முக்கிய தேதிகள்

1809 ஜனவரி 4 ஆம் தேதி பிரான்சின் கூப்வ்ரே கிராமத்தில் பிறந்தார்.

1812 லூயிஸ் தனது தந்தையின் கடையில் ஏற்பட்ட விபத்தில் பார்வையற்றவராக ஆனார்.

1819 பாரிஸில் உள்ள தேசிய பார்வையற்ற குழந்தைகளுக்கான நிறுவனத்தில் படிக்கத் தொடங்கினார்.

1824 தனது முதல் உயர்த்தப்பட்ட புள்ளி எழுத்துக்களை முடித்தார்.

1826 தேசிய நிறுவனத்தில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1835 காசநோயால் பாதிக்கப்பட்டார்.

1839 பார்வையற்றவர்கள் ஆறு-புள்ளி முறையைப் பற்றி அறிமுகமில்லாத பார்வையற்றவர்களுக்கு எழுதும் வகையில் உயர்த்தப்பட்ட புள்ளிகளைக் கொண்ட ஒரு எழுத்துக்களான ரெ.ஃபிகிரா.ஃபியைக் கண்டுபிடித்தார்.

1852 ஜனவரி 6 ஆம் தேதி பாரிஸில் இறந்தார்.